வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

நாள்: 27.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமிழகத்தில் 4 நாள் பயணமாக இன்று கோவை வந்து சேர்ந்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று, இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, புதுச்சேரியில் அனைத்து துறைகளும் தயார் நிலையில் உள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

-------------------------------

முர்மு (11)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமிழகத்தில் 4 நாள் பயணமாக இன்று கோவை வந்து சேர்ந்துள்ளார். நாளை, ஊட்டி வெலிங்டன்னில், ராணுவப் பயிற்சிக் கல்லூரி நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார். நாளை மறுநாள் 29ஆம் தேதி, நீலகிரி பகுதியைச் சேர்ந்த பழங்குடி மக்களுடன் அவர் கலந்துரையாடுவார். வரும் சனிக்கிழமை குடியரசுத் தலைவர் திருவாரூர் சென்று, தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் வருகையை ஒட்டி, கோவை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. சாதகமற்ற வானிலை காரணமாக, குடியரசுத் தலைவர் கோவையில் இருந்து, சாலை மார்க்கமாக, உதகமண்டலம் செல்வதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

-------------------------------

*மோடி வினாடி-வினா (14)*

முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான இளம் தலைவர்கள் உரையாடலில் பங்கேற்கும் வாய்ப்பை பெற, இளைஞர்கள், விக்சித் பாரத் சவால் போட்டியில் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை இளைஞர்கள் அரசிடம் தெரிவிப்பதற்கான, சிறப்பு வாய்ப்பாக இப்போட்டிகள் அமைவதாகவும், இளைஞர்கள் வழங்கும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள், விக்சித் பாரத் இலக்கை எட்டுவதற்கான அழியாத பங்களிப்பாக திகழும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார். 4 நிலைகளாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள விக்சித் பாரத் சவால் போட்டிகளின் முதல் நிலை வினாடி-வினா போட்டிகள், அடுத்த மாதம் 5ஆம் தேதி வரை, நடைபெறும் என்றும், 15 முதல், 29 வயது வரையிலான இளைஞர்கள், இதில் பங்கேற்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*நாடாளுமன்றம்* (18)

தனியார் தொழில் குழுமம் ஒன்றுக்கு எதிரான லஞ்ச ஊழல் புகார்கள், மற்றும், இதர பிரச்சனைகள் குறித்து, எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இன்று, நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை, இன்று காலை கூடிய போது, இப்பிரச்சனைகள் குறித்து, 267ஆவது விதியின் கீழ் அவையில் விவாதிக்கக் கோரி, எதிர்கட்சிகள் கொடுத்து இருந்த ஒத்தி வைப்பு நோட்டீஸ்கள் நிராகரிக்கப் படுவதாக, அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறினார். கடந்த 30 ஆண்டுகளில், அவையின் 267ஆவது விதி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளதாக அவர் கூறியதை ஏற்காமல், காங்கிரஸ், திமுக, இடதுசாரிகள், மற்றும், இதர எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், அவை, 11.30 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடிய சமயத்திலும், தொடர்ந்து கூச்சல்-குழப்பம் நீடித்த நிலையில், அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவையில், முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர், நண்பகல் 12 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய சமயத்திலும், எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியில் கூடி, கோஷம் எழுப்பிய வண்ணம் இருந்ததால், மக்களவையின் அலுவல்களும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

-----------------------------

*குழந்தை திருமணம்* (15)

குழந்தை திருமணங்கள் இல்லாத நாடாக இந்தியாவை மேம்படுத்த, மத்திய அரசு, தேசிய அளவிலான இயக்கம் ஒன்றை தொடக்கி உள்ளது. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, இன்று புதுடெல்லியில் இந்த இயக்கத்தை தொடக்கி வைத்து பேசுகையில், குழந்தை திருமணங்களை முற்றிலுமாக ஒழிக்கும் வரை, இயக்கம் தொடரும் என்றார். இந்த இயக்கத்தை சிறப்பு கவனத்துடன் செயல் படுத்துவதற்கான 130 மாவட்டங்களை, மத்திய அரசு இனம் கண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். குழந்தை திருமணங்கள், கிரிமினல் குற்றம் என்பதற்கு அப்பாற்பட்டு, மனித உரிமை மீறலாகவும் அமைவதாகவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியின் போது, குழந்தை திருமணங்கள் இல்லாத இந்தியா இயக்கத்திற்கான இணைய தளத்தை அமைச்சர் தொடக்கி வைத்தார். குழந்தை திருமணம் பற்றிய தகவல்களை பொது மக்கள் தெரிவிக்க தேவையான வசதிகளும், குழந்தை திருமணங்களுக்கு எதிரான விழிப்புணர்வு அம்சங்களும், இந்த இணைய தளத்தில் இடம்பெற்றுள்ளன.

------------------------------

*திரைப்பட விழா* (10)

கோவாவில் நடைபெறும் 55ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், மறைந்த இயக்குநர் தபன் சின்ஹா நூற்றாண்டை ஒட்டி, அவரது படைப்புகள் குறித்து நடைபெற்ற சிறப்பு அரங்கில், அர்ஜுன் சக்ரவர்த்தி, ஷர்மிளா தாகூர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, உரையாற்றினர். தபன் சின்ஹா இயக்கிய 48 திரைப்படங்களில், ஒவ்வொன்றும், ஒவ்வொரு கதையம்சமும், ஒவ்வொரு பாணியும் கொண்டவை என்று, அர்ஜுன் சக்ரவர்த்தி கூறினார். இன்றைய தினம் திரைப்பட விழாவில், பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் நினைவாக இடம்பெறும் நிகழ்ச்சியில், பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான், திரைப்பட விமர்சகர் நமன் ராமச்சந்திரனுடன் கலந்துரையாடுகிறார்.

------------------------------

*வானிலை* 1 (18)

நேற்று வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், மணிக்கு 13 கி.மீ வேகத்தில், வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று, நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கே, 370 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு தென்கிழக்கே, 470 தொலைவிலும், சென்னைக்கு தெற்கு-தென்கிழக்கே, 550 தொலைவிலும், நிலை

கொண்டுள்ளது. அடுத்த 12 மணி நேரத்தில், இது, வடக்கு-வடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து, புயலாக வலுப்பெறக் கூடும் என்றும், அதற்கடுத்த 2 நாட்களில், இலங்கை கடற்கரையை ஒட்டி, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளை நோக்கி, நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழைக்கும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், தஞ்சாவூர் மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள், மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் அதிகனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் கடலோர

*வானிலை* 2 (11)

பகுதிகள், மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரைக்காற்று வீசும் என எச்சரிக்கப் பட்டுள்ளது. தமிழக - ஆந்திர கடலோரப் பகுதிகளிலும், தென்மேற்கு- மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளிலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். ஏற்கனவே ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்கால் துறைமுகங்களில், 3ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நாகப்பட்டினத்தில், 19 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 10 செ.மீட்டர், மற்றும் புதுச்சேரியில் 8 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

------------------------------

*புயல்-ரங்கசாமி* 1 (18)

புதுச்சேரியில் புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, அனைத்து துறைகளும் தயார் நிலையில் உள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, இன்று, அனைத்துத் துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை மேற்கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மழை நீர் தேங்காத வகையில், 60 இடங்களில் மின் மோட்டார் பொருத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், தாழ்வான பகுதியில் உள்ள

மக்களை தங்க வைக்க, 121 நிவாரண முகாம்கள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பேரிடர் மேலாண்மை நிதி, தேவையான அளவு உள்ளதாகவும், மழை நேரத்தில் அனைத்துத் துறைகளும், சரியான முறையில் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் முதலமைச்சர் கூறினார். சுற்றுலா பயணிகள், கடலுக்கு அருகே செல்லாத வகையில் அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும், காலாபட்டில் கடல் அரிப்பைத் தடுக்க, கற்கள் கொட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், தலைமைச் செயலர் திரு. ஷரத் சௌகான், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், மற்றும், பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட

*புயல்-ரங்கசாமி* 2 (5)

பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். முன்னதாக, முதலமைச்சர் திரு.ரங்கசாமி, இன்று, புதுச்சேரி கடற்கரைக்கு நேரில் சென்று, கடல் சீற்ற நிலவரங்களை பார்வையிட்டார். அங்கு பணியில் இருந்த போலீசாரிடம், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அவர் கேட்டறிந்து, உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

-------------------------------

*சபாநாயகர் ஆய்வு* (19)

புதுச்சேரியில், நல்லவாடு, பணித்திட்டு, பிள்ளையார்குப்பம் உள்ளிட்ட கடலோர கிராமங்களில், மழையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை, சட்டப் பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் ஆகியோர், இன்று, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நல்லவாடு மீனவர்களின் படகுகள், மற்றும், மீன்பிடி சாதனங்களை பத்திரமாக வைக்க, தற்காலிக இடம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. தூண்டில் முள் வளைவு அமைத்துத்தர, மீனவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், செய்தியாளர்களிடம் கூறினார். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் புதுச்சேரிக்கு வந்துள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்தார். தாழ்வான பகுதியில் உள்ள மக்கள், தாங்களாகவே முன்வந்து, நிவாரண முகாம்களில் தங்கிக் கொள்ளலாம் என்றும், முகாம்களில் இலவச உணவுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மறு அறிவிப்பு வெளியாகும் வரை,

மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப் பட்டுள்ளதாகவும், முதியோர் மற்றும் கருவுற்ற பெண்களை, முன்னெச்சரிக்கையாக மருத்துவமனையில் சேர்க்க, சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மாவட்ட ஆட்சியர் மேலும் தெரிவித்தார்.

-------------------------------

*காரைக்கால் வாக்காளர்* (7)

காரைக்காலில், சுருக்குமுறை வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளுக்கான பார்வையாளர் டாக்டர் முத்தம்மா தலைமையில் இன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடர்பான தங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறினர். காரைக்கால் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன், மற்றும், பல்வேறு அரசுத் துறை அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

-------------------------------

*காரைக்கால் கண்காட்சி* (7)

காரைக்காலில், பள்ளிகளுக்கு இடையிலான மண்டல அறிவியல் கண்காட்சி, கோவில்பத்து அரசு உயர்நிலைப் பள்ளியில், வரும் 30ஆம் தேதி முதல், டிசம்பர் 3ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அறிவியல் முன்னேற்றத்தையும், அதன் பயன்பாடுகளையும் விளக்கும் வகையில், பள்ளி மாணவர்கள் உருவாக்கி உள்ள பல அரிய காட்சிப் பொருட்கள், இக்கண்காட்சியில் இடம்பெறும் என காரைக்கால் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

-------------------------------

*சபரிமலை* (11)

கேரள மாநிலம் சபரிமலைக் கோவிலில், மண்டல மகர விளக்கு திருவிழா காலத்தை ஒட்டி, அன்றாடம் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள், தரிசனம் செய்து வருகின்றனர். 12 விளக்கு திருநாளான இன்று காலை மட்டும், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கிடையே, உயர் பாதுகாப்பு மண்டலமான சபரிமலைக் கோவிலின் திருமுட்டம் மற்றும் சோபனம் பகுதிகளில், தடையை மீறி எடுக்கப்பட்ட வீடியோ படங்கள், சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருவது குறித்து, கேரள உயர்நீதிமன்றம், திருக்கோவில் நிர்வாக அதிகாரியிடம் விளக்கம் கோரி உள்ளது. பக்தர்களிடம் கொள்ளை லாபம் அடிக்கும் கடைகள் மீது, நடவடிக்கை எடுக்குமாறு இடைக்கால உத்தரவு ஒன்றையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமிழகத்தில் 4 நாள் பயணமாக இன்று கோவை வந்து சேர்ந்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று, இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, புதுச்சேரியில் அனைத்து துறைகளும் தயார் நிலையில் உள்ளதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.